திராவிட சிசுவும் கால வகைப்பாடும்

க.சுபலா & ம.கீதா / K. Subala & M. Geetha
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் / Avinashilingam Institute for Home Science and Higher Education for Women
கோயம்புத்தூர் / Coimbatore, Tamil Nadu.
subalakathirvel@gmail.com / mgeethaphd@gmail.com

Manuscript received 25 June 2025
Manuscript accepted 18 October 2025
*Corresponding author/First Author

ஆய்வுச் சுருக்கம்

கடவுள் நம்பிக்கையும் அதன் கொள்கைகளும் சமயம் என்று வரையறுக்கப்படுகின்றது. உலகில் தோன்றிய சமயங்களில் பழமையானதாகக் கருதப்படும் சைவ சமயம், சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்படுகின்றது. சைவ சமயம் மனிதர்களை நல்வாழ்விற்கு நெறிப்படுத்தி பண்படுத்துகின்றது. தமிழகத்தில் பிற சமயங்களான பௌத்தமும் சமணமும் மேலோங்கி வளர்ந்த காலத்தினை தமிழகத்தின் இருண்ட காலம் என வரலாற்று ஆய்வாளர்கள் வரையறுக்கின்றனர். இக்காலச் சூழலை மாற்றியமைத்து மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவும், சைவ சமயம் மேன்மையடைவதற்காகவும் சீர்காழிப் பதியில் திருஅவதாரம் புரிந்தவர் திருஞானசம்பந்தர் ஆவார். இப்பெருமகனாரின் அவதாரம் மற்றும் வாழ்ந்த காலம் குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவி வருவதைக் காணமுடிகின்றது. இக்கருத்துக்களின் முடிவுகளைத் திருஞானசம்பந்தரின் காலம் என்ற அடிப்படையில் இக்கட்டுரை நிறுவுகின்றது. 'திராவிட சிசுவும் கால வகைப்பாடும்' என்ற தலைப்பிலான இக்கட்டுரை முன்னுரை, தமிழ்வேதமும் ஞானசம்பந்தரும், சம்பந்தரின் காலமும் கருத்துக்களும், ஞானசம்பந்தரின் சமகாலத்தவர்கள், திராவிட சிசுவின் காலம் ஆகிய துணைத்தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவாக முடிவுரை வழங்கப்படுகின்றது.

குறிப்புச் சொற்கள்: சைவ சமயம் - திருஞானசம்பந்தர் - வரலாறு - கால வகைப்பாடு - திராவிட சிசு

Abstract

Religion is defined by belief in a supreme power and its guiding principles. Saivism, considered one of the oldest religions, reveres Lord Shiva as the ultimate deity, promoting a path to enlightenment and a better life. During a period when Buddhism and Jainism dominated Tamil Nadu, often referred to as the 'dark ages,' Thirugnanasambandhar's advent in Sirkazhi marked a turning point. He aimed to revive Saivism and guide people towards a more fulfilling path. However, his life and era remain shrouded in debate, with varying opinions on his incarnation and timeline. This article, 'The Elusive Timeframe of Thirugnanasambandhar,' seeks to reconcile these perspectives and provide clarity on his life and era. The article is structured as follows: Introduction, Tamil Veda and Gnanasambandar, Sambandar's Time Periods, Gnanasambandar's Contemporaries, Dravidian Sisu's Time, and Conclusion.

Keywords *: Saivam - Thirugnanasambandhar - History - Era - Dravidian Sisu*

முன்னுரை

உலகில் இன்று நிலவி வரும் சமயங்களுள் முதுமையானதாகவும், பழம்பெருமை வாய்ந்ததாகவும் கருதப்படுவது சைவ சமயம் ஆகும். இவ்வுலகப் பொருள்கள் அனைத்திற்கும் ஆதியும் அந்தமாகவும் விளங்குபவன் சிவபெருமான் ஒருவனே. அப்பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்படும் சைவ சமயம், அநாதி காலந்தொட்டே உயிர்ப்புடையதாக விளங்கிவருகின்றது. மெய்யறிவு முதிர்ந்து மெய்யன்பின் கண் விளைந்த தோத்திரங்களானத் திருமுறைகளை முதன்முதலில் சீர்காழிப் பதியில் தோற்றுவித்தவர் திருஞானசம்பந்தப் பெருமான் ஆவார். சங்கக் காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் பிற சமயங்களின் ஆதிக்கச் சூழல் மேலோங்கிய காலத்தைப் பற்றி வரலாற்று நிகழ்வுகள் குறிப்பிடுகின்றன. இத்தகு சூழலை மாற்றியமைக்கும் பொருட்டு தோன்றிய பக்தி இலக்கியங்கள் பல்லவர் ஆட்சிக் காலமாகிய கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி பெறத் தொடங்கின.

வேதநெறியும் சைவ சமயமும் தமிழகத்தில் தழைத்து வளர்வதற்குக் காரணமாக அமைந்த திருஞானசம்பந்தரின் காலம் குறித்து பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவி வருவதை ஆய்வாளர்களும் அறிஞர் பெருமக்களும் குறிப்பிடுகின்றனர். அக்கருத்துகள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளுள் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் விளங்கும் மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை அவர்களின் திருஞானசம்பந்தரது காலம் குறித்த நூலினை அடிப்படைத் தரவாகக் கொண்டு இக்கட்டுரை நிறுவப்படுகின்றது. திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலம் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகவும் அமைகின்றது.

தமிழ் வேதமும் ஞானசம்பந்தரும்

உலகின் முதன்மையும் முழுமையும் வாய்ந்து விளங்கி வரும் சிவவழிபாட்டினை மக்களுக்கு எடுத்துக்கூறும் விதமாக திருமுறைகள் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. காவிரிப்பாயும் கழனிநாட்டின் சீர்காழிப் பதியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானே இத்தமிழ் வேதங்களை தத்துவ நோக்கிலும் உலகியல் நோக்கிலும் எடுத்துக் கூறி மகிழ்ந்தார் என்பதைத்,

> "திருஞானசம்பந்தருக்கு ஒப்பாகப் பெயர் விளங்கும் அருளாளர் தென்னாட்டில் எவருமிலர்." (திருஞானசம்பந்தர் காலம் ஓர் ஆராய்ச்சி, ப.27)

என்று மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. பக்தியின் பிறப்பிடமாகக் கருதப்படும் தென்னாட்டில் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்றனர். அப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இருபத்தேழு அருளாளர்களால் பாடப்பெற்றுள்ள பன்னிரு திருமுறைகளைத் தமிழ் வேதங்கள் என்று குறிப்பிடுகின்றனர். பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் திருஞானசம்பந்தர் ஆவார். பெறுதற்கரிய பயனாகக் கருதப்படும் செல்வங்கள் அனைத்திற்கும் 'திரு' என்னும் அடைமொழியினோடு வழங்குவதை,

> "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" (திருமுறை.12.4:பா.8)

என்று வரும் பெரியபுராண வரியின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும், அத்தகு அருளாசிரியர்கள் திருவாய் மலர்ந்தருளப்பட்டுள்ள பாடல்களே திருமுறை என்று அழைக்கப்படுகின்றது. முறைப்பட இயற்றிய வகையினால் 'முறை' என்ற பெயர் பெற்றுள்ளதையும் காண முடிகின்றது.

உலகின் தற்போதைய கலாச்சாரப் பண்பாட்டுச் சரிவு ஏற்படுவதற்குக் கடவுள் பற்றிய தவறான மூடநம்பிக்கைகளும் பழமை வாதங்களுமே முதற்காரணம் என சமய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மனிதனை நல்வழியில் பக்குவப்படுத்தி வினைப் பயனைத் தீர்த்து இறைவனிடம்

செல்லும் நெறியினை வழிவகுப்பதே சைவ சமயத்தின் தலையாயக் கொள்கையாகக் கருதப்படுகின்றது. பதியான இறைவன் அநாதி என்பது போல உயிர்களும், பாசமலங்களும் அநாதிப் பொருள்கள் எனத் திருஞானசம்பந்தர் பதிகங்களில் எடுத்துரைப்பதைக் காண முடிகின்றது. உலகம் உய்யவும், சைவ செந்நெறி தழைக்கவும் தன் வாழ்நாள் முழுவதும் சைவ சமயப் பணிகளில் ஈடுபட்டு வந்ததை அவர்தம் வரலாறும், பதிகங்களும் உணர்த்துகின்றன.

சம்பந்தரின் காலமும் கருத்துகளும்

தொல்பழங்காலம் தொட்டே திராவிட மண்டலத்தில் சிவ வழிபாடு இருந்துள்ளதை அகழ்வாராய்ச்சி முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. நாகரிகம் தோன்றுவதற்கு நதிக்கரைகளும் ஆற்றுப்படுக்கைகளுமே முதன்மைக் காரணியாக இருந்துள்ளதை வரலாற்றாய்வுகள் குறிப்பிடுகின்றன. முனைவர் கால்டுவெல், முனைவர் பர்னல் மற்றும் சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளரான முனைவர் நெல்சன் ஆகியோர் சம்பந்தரின் காலம் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இக் குழப்பங்களுக்கு இடையில் முனைவர் டெய்லர் அவர்கள் கூன்பாண்டியனின் காலம் கி.மு.1320 ஆம் ஆண்டு என்றும், அக்காலக்கட்டத்தில்தான் திருஞானசம்பந்தரால் சமணர்கள் கழுவேற்றம் நடைபெற்றது என்ற கருத்தினையும் தெரிவிக்கின்றார்.

மேலும், இக்கருத்தின் அடிப்படையில் திருஞானசம்பந்தர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்று திரு.சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் குறிப்பிடுவதை வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்தாண்டுள்ளதைக் காணமுடிகின்றது. கூன்பாண்டியரும் திருஞானசம்பந்தரும் சமகாலத்தைச் சார்ந்தவர்கள் என்பதை இதன்மூலம் குறிப்பிடுகின்றார். ஆனால், முனைவர் கால்டுவெல் இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாக,

> "முனைவர் கால்டுவெல் கி.பி.1292ஆம் ஆண்டில் மதுரையை ஆண்ட மன்னன் கூன்பாண்டியன் என்கிறார். இவ்வேறுபட்ட கருத்துக்களினால் சம்பந்தர் கி.மு.1300ஆம் ஆண்டிற்கும், கி.பி.1292ஆம் ஆண்டிற்கும் இடையே, ஏறத்தாழ 2500 ஆண்டுகள் வாழ்ந்தார் என்று தெரிவிக்கின்றனர். இது முற்றிலும் தவறு, மற்றும் வியப்பானது. இந்த அளவுக்கு நீண்ட ஒரு கால இடைவெளியை ஒருவரது காலமென்று வரலாற்றில் யாரையுமே குறிப்பிட்டிருக்க மாட்டார்கள்." (திருஞானசம்பந்தர் காலம் ஓர் ஆராய்ச்சி, ப.38)

மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் முனைவர் கால்டுவெல்லின் கால இடைவெளி கருத்தினைச் சுட்டிக் காட்டுகின்றார்.

வட மொழி இலக்கியங்களான சமஸ்கிருத இலக்கியங்களின் முழுமையான மறுபதிப்புதான் தமிழ் இலக்கியங்கள் என முனைவர் பெர்னல் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாத காரணத்தினால் அவர் குறிப்பிட்ட காலக்கணக்கீட்டை எடுத்தியம்புவதற்கு இல்லை என்று இந்நூலின் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இதனை,

> "முனைவர் பெர்னல், தமிழில் எட்டாம் நூற்றாண்டு வரை எந்த இலக்கியமும் இல்லை என்று கூறுவதற்கு அடிப்படையான ஒரே ஆதாரம் என்னவென்றால், யுவான் சுவாங் எங்கேயோ கேட்ட செவி வழிச் செய்தியை வைத்து இந்த வினோதமான மறைந்த நகரத்து மக்களுக்கு இலக்கியத்தில் ஈடுபாடு மிகக்குறைவு என்று சொன்னதுதான்." (திருஞானசம்பந்தர் காலம் ஓர் ஆராய்ச்சி, ப.44)

என்றும்,

> "சமஸ்கிருத இலக்கியங்களின் முழுமையான மறுபதிப்பே தமிழ் இலக்கியம் என்பது முனைவர் பெர்னலின் அழுத்தமான கருத்து. இது குறித்து பெரிதாகக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், இதற்கு அவர் என்ன ஆதாரத்தைக் கூறுகிறார் என்பது தான் முக்கியம். தமிழ் இலக்கியங்கள் எதையுமே படிக்காத ஒருவர் குறளைப்

> படித்தாலே இக்கேள்விக்குச் சரியான பதிலைக் கூறியிருப்பார்." (திருஞானசம்பந்தர் காலம் ஓர் ஆராய்ச்சி, ப.45)

என்றும் மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவதன் வழி கருத்தின் உண்மைநிலைக் குறித்து அறிந்துகொள்ள முடிகின்றது.

புறச்சந்தானச்சாரியாரான உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சங்கற்ப நிராகரண நூலின் முகவுரையில் அந்நூல் அரங்கேற்றப்பட்ட வருடமும் காலமும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கொண்டு காலச் சூழலினை அறிந்துகொள்ள முடிகின்றது. தில்லை பெருங்கோயிலில் சக வருடம் 1235-ஆம் ஆண்டு ஆனி மாதம் நடைபெற்ற ஆறாம் திருவிழாவன்று அரங்கேற்றப்பட்டதாகவும், அதற்கு இணையான ஆங்கில ஆண்டாக கி.பி. 1313 என்றும் கருதப்படுகின்றது. இக்கூற்றினை வரலாற்றாய்வாளர்கள் முதன்மையானதாகக் கருதி, பல்வேறு காலக்கட்டத்தினை இதன் அடிப்படையில் நிறுவுகின்றனர்.

விடம் தீண்டிய வணிகன் அவனால் எழுந்தத் சிலப்பதிகாரக் கூற்றினைத் திருவிளையாடல் புராணக் கூற்றுடன் இணைத்து, இலங்கை கயவாகுக் காலத்திற்கு முன்பு வாழ்ந்த கிறித்துவ சகத்தின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் திருஞானசம்பந்தர் என்றும் பல்வேறு கருத்துக்கள் நிலவிவருவதைக் காணமுடிகின்றது.

ஞானசம்பந்தரின் சமகாலத்தவர்கள்

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சமகாலத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறித்துத் திருஞானசம்பந்தரது வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாவுக்கரசர் ஞானசம்பந்தரைச் சந்திப்பதற்காக சீர்காழிக்குச் சென்றதும், பின்னர் சில காலம் கழித்து இருவரும் இணைந்து பல்வேறு தலங்களுக்குத் தலயாத்திரை மேற்கொண்டது பற்றியும் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. இது குறித்து,

> "வயது 7 நடக்கும்போது வேதியர் வழக்கின்படி பூணூல் அணிவிக்கும் சடங்கு நிகழ்ந்தது. இக்காலத்தில் தில்லை வந்திருந்த நாவுக்கரசர் வெண்ணீறு அணிந்த பொன் மேனியராய், குறைந்த கந்தையுடன் சீர்காழி அடைந்தார். முதுமை நிறைந்த நிலையில் பேரன்பின் வடிவமாகத் தோன்றிய நாவுக்கரசரைக் கண்ட ஞானசம்பந்தர் நாவுக்கரசரால் கவரப்பட்டார். தந்தை போலக் கருதி அப்பர் என்றார். சில நாட்கள் அப்பர் அங்கேயே தங்கிவிட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்தார்." (தமிழக வரலாறும் பண்பாடும், ப.260)

என்று வே.தி.செல்லம் அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்நிகழ்விற்குப் பின்னர்தான், மதுரையில் சமண சமயத்தின் இருக்கைகளும் அவற்றின் ஆதிக்கமும் பல்கிப் பெருகியிருந்ததைப் பற்றி கூன்பாண்டியனது மனைவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தரிடம் சமணர்கள் நிகழ்த்திய அவலங்களைப் போக்க மதுரைக்கு அழைத்தனர். அவ்வழைப்பினையேற்று மதுரை மண்ணில் சைவத்தை உயர்வு பெற செய்தார். பிணியால் பாதிக்கப்பட்ட கூன்பாண்டியனின் நிலையையும் மாற்றி சைவ சமயத்திற்குத் திரும்பச் செய்தார்.

தஞ்சை திரு. சீனிவாசன் பிள்ளை, அவர்கள் ஞானசம்பந்தரின் திருச்செங்காட்டங்குடி தலயாத்திரையினை மேற்கோளிட்டு அங்கு வாழ்ந்த சிறுத்தொண்டரின் காலத்தையும் கணக்கிட்டுக் கொள்கிறார். இதனை,

> "திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தபோது சீராளர்க்கு மூன்றாண்டு நிறைந்திருந்ததென்பது பெரியபுராணத்தாலும் விளங்கும். எனவே கி. பி. 646-647க்கும், 648-649-க்கும் இடையில் திருஞானசம்பந்தர் வருகை நிகழ்ந்திருக்கக் கூடும். திருஞானசம்பந்தர் சிவசோதியிற் கலந்தது சிறுத்தொண்டர் சந்திப்புக்குப் பிறகு நான்கைந்து ஆண்டுகட்குப் பின்னராக பதினாறாண்டு வாழ்ந்தவர் என்று கூறப்பெறும்

பிள்ளையார் கி. பி. 655க்குச் சிறிது முன்னாக இறைவனொடு கலந்தனர் என்று கூறலாம்." (திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், பக்.63-64)

என்று குறிப்பிடுவதன் மூலம் அவர்தம் காலம் கி.பி.ஆறாம் அல்லது கி.பி.ஏழாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பது புலனாகின்றது.

திராவிட சிசுவின் காலம்

ஆதிசங்கரர் திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று குறிப்பிடுவதன் வழி ஆதிசங்கருக்கும் முற்காலத்தில் வாழ்ந்தவர் என்பதை மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை அவர்களால் இக்கூற்றினை நிறுவமுடிகின்றது. திருஞானசம்பந்தரின் காலத்தை ஆராய்வதற்கு ஆதிசங்கரரின் காலத்தை முதன்மை ஆதாரமாகக் கொண்டதை,

"ஒன்பதாம் நூற்றாண்டில் கிடைக்கும் வரலாற்றுக்குறிப்புகள் மூலம் சம்பந்தர் அக்காலத்திற்கு ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று கருதத்தக்க முடிவுகளைப் பெற முடிகிறது. இறுதியாக சௌந்தரிய லஹரியில் சம்பந்தரைப் பற்றி சங்கரர் குறிப்பிடுவதிலிருந்து, சம்பந்தர் தத்துவ ஞானியான சங்கரர் காலத்துக்கு முன்பு வாழ்ந்தவர் என்பதும் உறுதியாகிறது. திரு.பிளீட் என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறுவதைப் போல் நாமும் சங்கரர் கி.பி.630 ஆண்டிற்கும் கி.பி.655க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்று நம்பினால், ஏழாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தை சம்பந்தரின் இறுதிக் காலமாகக் கொள்ளலாம்." (திருஞானசம்பந்தர் காலம் ஓர் ஆராய்ச்சி, பக்.102-103)

என்று மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவதன் வழி ஆறாம் நூற்றாண்டின் கடைசி காலத்தை திருஞானசம்பந்தரின் ஆரம்ப காலமாகவும், ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியினை திருஞானசம்பந்தரின் இறுதி காலமாகவும் கருதலாம் என்பது இக்கருத்துகளின் மூலம் தெளிவாகின்றது.

முடிவுரை

உலகத் தோற்றத்திற்கு உருவாகவும், உலக இயக்கத்திற்கு கருவாகவும் இருக்கும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவ சமயமானது காலத்தால் வரையறுக்க முடியாத நிலையினைக் கொண்டதாகக் கருதப்படுகின்றது. தமிழகத்தில் பிற சமயங்களான சமண பௌத்தத்தின் கொள்கைகளை அச்சமய சான்றோர்கள் பரப்பினர். திருஞானசம்பந்தர் அதனை முழுமையாக எதிர்த்து தமிழையும், சிவபெருமானையும் முன்னிறுத்தி சைவசமயக் கொள்கைகளைப் பரப்பி பாதுகாத்து வந்துள்ளார்.

திருஞானசம்பந்தரின் காலத்தை ஆராயுமிடத்து களப்பிரர்களின் ஆட்சி காலமும் பிற சமயங்களின் ஆதிக்க காலமும் வெளிப்படும். அதன் மூலம் தமிழகத்தின் சமயவரலாற்றினை அறியவும், பக்தி இயக்கத்தின் செல்வாக்கு நிலையினை அறிந்து கொள்ளவும் முடிகின்றது. ஞானசம்பந்தரின் வரலாற்றுடன் பல்வேறு கருத்துகள் பிணைத்திருப்பதாலும் கால ஆராய்ச்சியில் பல்வேறு கருத்துவேறுபாடுகள் நிலவியுள்ளதையும் இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

திருத்தொண்டர் புராணம் இயற்றிய சேக்கிழார் தொடங்கி முனைவர் கால்டுவெல் வரை தத்தம் கருத்துகளின் வழி திருஞானசம்பந்தரின் காலத்தை நிறுவமுற்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. திருஞானசம்பந்தர் காலம் குறித்து பேராசிரியர் மனோன்மணியம் பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டதன் மூலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியின் இடையில் இருக்கலாம் என்பதை இக்கட்டுரை எடுத்துரைத்துள்ளதைக் காண முடிகின்றது.

துணை நூற்பட்டியல்

மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை, தமிழாக்கம்: பேரா முனைவர் சு.மோதிலால் நேரு, *திருஞானசம்பந்தர் காலம் ஓர் ஆராய்ச்சி*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 600 050, முதற் பதிப்பு - 2024.

சொக்கலிங்கம் சிங்காரவேலன். *திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்.* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 001, முதற் பதிப்பு - 1969.

தருமை ஆதீனம் (ப.குழு). *பன்னிரு திருமுறைகள் (முழுவதும்).* தருமை ஆதீனம், ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை - 609 001, முதற் பதிப்பு - 2023.
செல்லம்.வே.தி. *தமிழக வரலாறும் பண்பாடும்*, மணிவாசகர் நூலகம், சிதம்பரம் - 608 001, மூன்றாம் பதிப்பு - 2000.

In English
Manomaniam P. Sundram Pillai, Tamil Translation - Professor S.Mothilal Nehru, Thirugnanasambandhar Kaalam oor aaraichi, New Century Book House Private Limited, Chennai - 600 050, First Edition - 2024.
Chokkalingam Singaravelan. Thirugnanasambandhar Varalatru Aaraichum Thevara Thiranaaivum. Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly Limited. Chennai - 600 001, First Edition - 1969.

V.T. Chellam, Thamizhaga Varalaarum Panpaadum, Manivasagar Noolagam, Chidambaram - 608 001, Third Edition - 2000.

Dharumai Aadheenam (Ed. Committee). Panniru Thirumuraigal. Gnanasambandham Publication, Dharumai Aadheenam, Mayiladuthurai - 600 091, First Edition - 2023.